**மதிப்பிற்குரிய சட்டப் பேரவை உறுப்பினர்களே,**

2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டப் பேரவையின் முதல் கூட்டத் தொடரின் தொடக்கத்தில் உங்களிடையே உரையாற்றுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். உங்கள் அனைவருக்கும் எனது உளங்கனிந்த புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது பன்னிரெண்டாவது சட்டப் பேரவையின் நிறைவுக் கூட்டத் தொடர் ஆகும். மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் மாண்பமை இம்மாமன்றத்தின் உறுப்பினர்கள் ஆற்றியுள்ள அரும்பணிக்கு இத்தருணத்தில் பேரவை உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழக மக்கள் இவ்வரசின் மீது வைத்திருக்கும் ஆழ்ந்த நம்பிக்கையை நிறைவு செய்ய, வெல்லுதற்கரிய சவால்கள் அனைத்தையும் முறியடித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இவ்வரசு, அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது.

**2.** தொலை நோக்குப் பார்வையோடு, தமிழகத்தை நாட்டிலுள்ள மாநிலங்களுள் முதன்மை மாநிலமாக மாற்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முனைந்தார்கள். இந்நிலையை அடைவதற்கான செயல்திட்டம், மாண்புமிகு முதல்வர் அவர்களின் 15 அம்சத் திட்டத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டது. இன்று தமிழ்நாடு, மிக வேகமாக முன்னேறி பல துறைகளில் முதன்மை மாநிலமாகவே திகழ்கிறது. முதலீடுகளுக்கு உகந்த இடம், பொதுச் சேவைகள், சமூக நலத் துறைகள், சட்டம்–ஒழுங்கு பராமரிப்பு போன்ற அனைத்துக் கூறுகளிலும் தமிழகம் முதன்மை மாநிலமாக இருப்பதாக பெரும்பான்மையான நடுநிலை ஆய்வுகள் மதிப்பீடு செய்துள்ளதில் இச்சாதனை பிரதிபலிக்கப்படுகிறது.

**3.** கடந்த **2005** ஆம் ஆண்டு பெய்த அதிகப்படியான மழை, மாநிலத்தின் வறட்சிப் பகுதிகளில் குடிநீர் பற்றாக்குறையைத் தீர்த்து, உழவர்களுக்கு அடுத்த பருவ காலத்தில் நல்ல விளைச்சல் கிடைக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ள போதிலும், அக்டோபர் திங்கள் முதல் டிசம்பர் திங்கள் வரை தமிழகம் தொடர் மழை மற்றும் வெள்ளத்தினால் மிக மோசமாக பாதிக்கப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள்

அனைவரும் அறிவர். இதனால் பலமுறை தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் உயிர்ச் சேதமும், பயிர்கள் மற்றும் பொதுக் கட்டமைப்புகளுக்குப் பெருமளவில் பாதிப்பும் ஏற்பட்டுள்ளன. வெள்ளம் பாதித்த 22 மாவட்டங்களிலும் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. வெள்ளத்தின் பாதிப்பை மதிப்பீடு செய்யவும், நிவாரண மற்றும் சீரமைப்புப் பணிகளை முடுக்கிவிடவும், பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களே பலமுறை நேரில் சென்று பார்வையிட்டார். இவ்வெள்ள நிலையை சமாளிப்பதற்காக அரசு நிருவாகம் முழு அளவில் முடுக்கிவிடப்பட்டது. இலட்சக்கணக்கான மக்கள் வெள்ளப் பகுதிகளிலிருந்து மீட்கப்பட்டு தற்காலிக வெள்ள நிவாரண மையங்களில் தங்கவைக்கப்பட்டனர். அவர்களுக்குத் தேவையான உணவு, பாதுகாப்பான குடிநீர் மற்றும் மருந்துகள் ஆகியன வழங்கப்பட்டன. விரிவான வெள்ள நிவாரணத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு, மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் மூத்த இந்திய ஆட்சிப்பணி அலுவலர்கள் ஆகியோரின் நேரடி மேற்பார்வையின்கீழ் செயல்படுத்தப்பட்டது.

4. மத்திய அரசிடமிருந்து உதவிகோரி, 2005 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 3 ஆம் நாள், ஒரு

விரிவான கோரிக்கை மனு முதற்கண் அளிக்கப்பட்டது. அதன்பின்னர் மேலும் இரண்டு கோரிக்கை மனுக்கள் அளிக்கப்பட்டன. நிவாரணம், சீரமைப்பு மற்றும் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக, மொத்தம் ரூபாய் 13,685 கோடி நிதியுதவி, 2.58 இலட்சம் டன் அரிசி மற்றும் 43,200 கிலோ லிட்டர் மண்ணெண்ணை ஆகியவற்றை இவ்வரசு கோரியுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 2005 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 16 ஆம் நாள் மாண்புமிகு பிரதமர் அவர்களை நேரில் சந்தித்து, சேதத்தின் அளவு, மேற்கொள்ளப்பட்ட நிவாரணப் பணிகள் மற்றும் மாநிலத்திற்குத் தேவைப்படும் உதவி ஆகியன குறித்து விரிவாக எடுத்துரைத்தார். இவ்வுறுதியான வேண்டுகோளையடுத்து, மத்திய அரசு இதுவரை நிவாரணம் மற்றும் சீரமைப்புப் பணிகளுக்காக மொத்தம் ரூபாய் 1000 கோடி நிதியுதவியும் மற்றும் 21,000 கிலோ லிட்டர் மண்ணெண்ணையும் அளித்துள்ளது.

5. பலமுறை ஏற்பட்ட வெள்ளப் பெருக்கையும், நீர் சூழ்ந்ததையும் கருத்தில் கொண்டு பாதிக்கப்பட்டோர் அனைவரையும் சென்றடையும் வகையில் நன்கு வடிவமைக்கப்பட்ட மற்றும் தாராளமான நிவாரணத்

திட்டத்தை இவ்வரசு அறிவித்து செயல்படுத்தியது. இலட்சக்கணக்கான குடும்பங்களுக்கு உதவும் வகையில், மாபெரும் அளவில் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும், முழுவதும் சேதமடைந்த குடிசைகளுக்கு ரூபாய் 2000 ரொக்கமும், பகுதி சேதமடைந்த குடிசைகளுக்கு ரூபாய் 1000 ரொக்கமும், பத்து கிலோ அரிசி, ஒரு லிட்டர் மண்ணெண்ணை, சேலை மற்றும் வேட்டி ஆகியவை வழங்கப்பட்டன. சென்னை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ரூபாய் 2000 ரொக்கம், பத்து கிலோ அரிசி, ஒரு லிட்டர் மண்ணெண்ணை, சேலை மற்றும் வேட்டி ஆகியவை வழங்கப்பட்டன. சென்னை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் பாதிக்கப்பட்ட தெருக்களையும், பிற பகுதிகளில் பாதிக்கப்பட்ட வார்டுகள் மற்றும் குடியிருப்புகளையும் கண்டறிவதற்காகப் பின்பற்றப்பட்ட எளிமையான முறை, வீடுதோறும் சென்று கணக்கெடுக்கும் முறையில் வழக்கமாக ஏற்படும் சிக்கல்களை பெரிதும் குறைத்தது. பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள் விரைவில் வழங்கப்பட இம்முறை உதவியுள்ளது.

**6.** வெள்ள நிவாரணத்திற்காகவும், புனரமைப்புப் பணிகளுக்காகவும், மொத்தம் ரூபாய் **1079** கோடியை இவ்வரசு ஒதுக்கியுள்ளது. உடனடி நிவாரண உதவிகளுக்காக ஒதுக்கப்பட்ட ரூபாய் **566** கோடியும் இதில் அடங்கும். தமிழ்நாட்டில் இதுவரையில் இந்நிவாரண உதவி **31** இலட்சம் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. சென்னை நகரில் மட்டுமே, **6** இலட்சத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் அரசின் நிதி உதவியைப் பெற்றுள்ளன. இத்தகைய பெரும் அளவிலான நிவாரண நடவடிக்கைகள், இதுவரை எப்போதுமே மேற்கொள்ளப்பட்டதில்லை. பாதிக்கப்பட்ட சாலைகள், பாலங்கள், சிறு பாலங்கள், ஏரிகள், பாசனத் திட்டங்கள் மற்றும் கட்டடங்கள் போன்ற பொதுக் கட்டமைப்பு வசதிகளை செப்பனிடவும், சீரமைக்கவும் ரூபாய் **513** கோடி ஒதுக்கீட்டில் பெரும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பாதிக்கப்பட்ட உழவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கும், நிரந்தரச் சீரமைப்பு மற்றும் புனரமைப்புப் பணிகளுக்கும் மத்திய அரசு மேலும் நிதியை ஒதுக்குமென இவ்வரசு நம்புகிறது. மாண்புமிகு முதல்வரின் வேண்டுகோளை ஏற்று, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவுவதற்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு தாராளமாக

நிதியுதவி வழங்கிய, நல்லெண்ணம் கொண்ட நிறுவனங்கள் மற்றும் பொது நலத்தில் அக்கறை கொண்ட குடிமக்கள் ஆகியோருக்கு இத்தருணத்தில் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

7. பேரழிவுச் சுனாமிப் பேரலைகள், தமிழகத்தின் கடலோரப் பகுதிகளைத் தாக்கி பெரும் உயிர்ச் சேதத்தையும், பொருட்சேதத்தையும் ஏற்படுத்தி மக்களின் வாழ்வை நிலைகுலையச் செய்த துயர நிகழ்வு ஏற்பட்டு ஓராண்டு ஆகிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தெளிவான அணுகுமுறை மற்றும் சீரிய கொள்கை வழிநடத்துதலினால் இவ்வரசு, தேடுதல், காப்பாற்றுதல், உடல்களைப் புதைத்தல்/எரித்தல் மற்றும் உடனடி உதவிகள் ஆகிய முதல் கட்டப் பணிகளை மிகக் குறுகிய காலத்திலேயே செம்மையாகச் செய்து முடித்து, உலகளாவிய பாராட்டைப் பெற்றது. ஏற்கனவே கருத்தடை அறுவை செய்திருந்து, இச்சுனாமிப் பேரழிவின்போது தமது குழந்தைகளைப் பறிகொடுத்த தாய்மார்கள் மீண்டும் கருத்தரிப்பதற்கான அறுவை சிகிச்சை செய்துகொள்வதற்கு ஆகும் செலவு முழுவதையும் தமிழக அரசே ஏற்கும் என்ற முடிவு, அக்கறைகொண்ட இவ்வரசின் கருணை உள்ளத்தைப் புலப்படுத்துகிறது.

தற்போது நீண்டகால மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வுக்கான பெருந்திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. மத்திய அரசு சுனாமி நிவாரண மற்றும் புனரமைப்புப் பணிகளுக்காக ரூபாய் 812 கோடியை மட்டுமே அளித்துள்ள போதிலும், இவ்வரசு நிவாரண மற்றும் புனரமைப்புப் பணிகளுக்காக ரூபாய் 1136 கோடியை அனுமதித்துள்ளது. இத்துடன், இவ்வரசு பல்வகை பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்து நீண்ட காலச் சீரமைப்புப் பணிகளுக்காக ரூபாய் 2618 கோடி அளவிற்கு நிதியுதவியைப் பெற்றுள்ளது. இவ்வுதவியில், உலக வங்கியிடமிருந்து பெறப்பட்ட ரூபாய் 1903.50 கோடி முழுவதும் கடனாகவும், ஆசிய வளர்ச்சி வங்கியிடமிருந்து ரூபாய் 304 கோடி கடனாகவும், ரூபாய் 343 கோடி மானியமாகவும் பெறப்பட்டுள்ளது. மேலும் வேளாண்மை வளர்ச்சிக்கான சர்வதேச நிதியிலிருந்து ரூபாய் 67.50 கோடி கடனாகப் பெறப்பட்டுள்ளது. இக்கடன்கள் முழுவதும் மாநில அரசாலேயே திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். இத்தகைய பன்னாட்டு நிதி நிறுவனங்களின் உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்களின் கீழ், இவ்வரசு ஏற்கனவே ரூபாய் 832 கோடி நிதியை சீரமைப்புப் பணிகளுக்கும், வாழ்வாதார உதவிகளுக்கும் அனுமதித்துள்ளது.

**8.** தீர்க்கமான குறிக்கோளுடனும், உறுதியுடனும் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு புனரமைப்புப் பணிகள் செயல்படுத்தப்பட்ட முறை, தமிழகத்திற்கு சர்வதேச அளவில் பெரும் புகழை ஈட்டித்தந்துள்ளது. அமெரிக்க நாட்டைச் சேர்ந்த, ஆதாய நோக்கில்லாத சர்வதேச அமைப்பான ஃபிரிட்ஸ் நிறுவனம் அண்மையில் நடத்திய ஆய்வு, தமிழகத்தில் ஏற்பட்ட சுனாமிப் பேரழிவின்போது மேற்கொள்ளப்பட்ட மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் இவ்வரசின் சிறப்பான பங்கினைப் பெரிதும் பாராட்டியுள்ளது.

**9.** சட்டம்—ஒழுங்கைச் சீரிய முறையில் பேணிப்பாதுகாப்பதற்கு இவ்வரசு அளித்த முக்கியத்துவமானது, தமிழகத்தை ஒரு அமைதிப் பூங்காவாக மாற்றியுள்ளது. சட்டம்—ஒழுங்கில் விழிப்பான கண்காணிப்பு, உறுதியான நடவடிக்கை, சம்பந்தப்பட்ட அரசுத் துறைகளின் தொடர் மேற்பார்வை மற்றும் ஒருங்கிணைந்த அணுகுமுறை ஆகியவற்றால் தீவிரவாதம் முற்றிலும் ஒழிக்கப்பட்டுள்ளது. கடந்த இருபது ஆண்டுகளாக, சட்டத்திற்குப் புறம்பாகச் செயல்பட்டு, அரசுக்கு மாபெரும் சவாலாக இருந்துவந்த காட்டுக் கொள்ளையன் வீரப்பனை வீழ்த்தியது

இவ்வரசின் மிகப்பெரும் சாதனையாகும். அண்டை மாநிலங்களான ஆந்திரம் மற்றும் கர்நாடகம் ஆகியவற்றை அடுத்துள்ள எல்லை மாவட்டங்களில் நக்சலைட்டுகளின் அச்சுறுத்தல் வெற்றிகரமாகக் கையாளப்பட்டுள்ளது.

**10.** கடந்த ஐந்தாண்டுகளில் தமிழகத்தில் மீண்டும் சட்டத்தின் ஆட்சி நிலைநாட்டப்பட்டதற்கு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் காட்டிய திட நோக்கும், உறுதியுமே காரணமாகும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒப்புக்கொள்வர். இன்று தமிழக காவல்துறை நமது நாட்டிலேயே மிகச் சிறப்பாக சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கும் அமைப்பாக மாறியுள்ளது. தமிழக காவல்துறையை நவீனப்படுத்துவதற்காக, ரூபாய் 479 கோடி ஒதுக்கீட்டில் விரிவான திட்டம் வகுக்கப்பட்டு, 2001 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. துரிதமான புலனாய்வுக்கு வழிவகுக்கும் வகையில் நவீன தொலைத்தொடர்பு சாதனங்கள், ஊர்திகள், ஆயுதங்கள், தளவாடங்கள் மற்றும் அனைத்து வசதிகளும் காவல்துறைக்கு வழங்கப்பட்டுள்ளன. காவல் துறையினை நவீனப்படுத்துவதில் தமிழக முதலமைச்சர் காட்டிய தாராள ஆதரவின் பயனாக, 2001 இல் 71 சதவீதமாக இருந்த குற்றக் கண்டுபிடிப்பு வீதம்,

2005 ஆம் ஆண்டில் 86 சதவீதமாக உயர்ந்துள்ளது. காவல்துறையின் பல்வேறு பதவி நிலைகளைச் சேர்ந்த காவலர்களுக்காக, 2001 ஆம் ஆண்டிலிருந்து ரூபாய் 416 கோடி செலவில் 10,000 வீடுகள் கட்டப்படுவதன் காரணமாக, நாட்டிலேயே தமிழக காவல் துறையினர் வீட்டுவசதி குறித்து அதிகமான மன நிறைவை அடைந்துள்ளனர். வளர்ந்து வரும் சென்னை மாநகரின் பாதுகாப்புத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக சென்னைப் பெருநகரக் காவல்துறை ஆணையரகம் புதியதாக உருவாக்கப்பட்டுள்ளது. அதிக அளவில் பெண்கள் காவல்துறையில் பணியமர்த்தப்பட்டுள்ளதும், 196 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதும், தேசிய அளவில் தமிழக காவல்துறையின் பாலின நேர்மை உணர்வை மேலும் உயர்த்தியுள்ளது.

11. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மற்றும் சிறைச்சாலைத் துறை ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக, முறையே ரூபாய் 25 கோடி மற்றும் ரூபாய் 48 கோடி செலவில், இவ்வரசினால் செயல்படுத்தப்பட்ட நவீனமயமாக்கல் திட்டங்கள் அனைவரின் ஏகோபித்த பாராட்டைப் பெற்றுள்ளன.

தமிழகத்தில் தொடங்கப்பட்ட தொலை நீதிமுறைத் திட்டம், சிறைகள் மற்றும் நீதிமன்றங்களை மின்னணு முறையின் மூலம் இணைத்து விசாரணை செய்ய உதவும் வீடியோ கலந்தாய்வுத் திட்டங்களில், இந்தியாவிலேயே மிகப் பெரியது என்பது குறிப்பிடத்தக்கது. சென்னை அருகே உள்ள புழலில் அமைக்கப்பட்டுவரும் ரூபாய் 77 கோடி செலவிலான நாட்டிலேயே அதிநவீன சிறைச்சாலை வளாகம் விரைவில் கட்டி முடிக்கப்படவுள்ளது.

**12.** பொருளாதார வளர்ச்சி குறித்த பெரும் ஐயப்பாடுகள், அச்சுறுத்தும் நிதிநிலைச் சீர்கேடு மற்றும் முடங்கிய வளர்ச்சி நிருவாகம் ஆகியவற்றோடு தமிழகம் இந்தப் புத்தாயிரமாண்டை எதிர்கொண்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நினைவு கூர்வர். ஐந்தாண்டுகளுக்கும் குறைவான இக்குறுகிய காலகட்டத்தில் நமது மாநிலம் மிகச் சீரிய திருப்புமுனையை அடைந்துள்ளது. பொருளாதாரத்தின் முக்கிய துறைகள் மீண்டும் முன்னேற்றப் பாதையில் செல்லத் துவங்கியுள்ளன. சுனாமியால் ஏற்பட்ட பேரழிவு மற்றும் வரலாறு காணாத வெள்ளத்தால் ஏற்பட்ட சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தும் 2005–2006 ஆம் ஆண்டில், தமிழகம் 8 சதவீதத்திற்கும் அதிகமான

பொருளாதார வளர்ச்சியை எய்தும் என முதல்கட்ட மதிப்பீடுகளின்படி எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாட்டிற்குப் பாய்ந்துவரும் புதிய முதலீடுகளே மாநிலத்தின் பொருளாதார ஏற்றத்திற்குத் தக்க சான்றாகும்.

13. மாநிலத்தின் பொருளாதாரச் சீர்திருத்தத்தையும், வளர்ச்சித் தேவைகளையும் ஒருங்கிணைத்து, இவ்வரசு மாநிலத்தை நடத்திச் சென்ற பாங்கு தனிச் சிறப்பிற்குரியதாகும். இதன் விளைவாக, புத்தாயிரமாண்டு வளர்ச்சி இலக்குகளை, இலக்காண்டான 2015 க்கு வெகு முன்னரே நமது மாநிலம் எய்த உள்ளது. 2001–2002 ஆம் ஆண்டில் ரூபாய் 5200 கோடியாக இருந்த தமிழகத்தின் வளர்ச்சித் திட்ட ஒதுக்கீடு, 75 சதவீத அளவிற்கு உயர்ந்து, 2005–2006 ஆம் ஆண்டில் ரூபாய் 9100 கோடியை எட்டியுள்ளது. மேலும் 2002–2007 ஆண்டுகளுக்கான பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீடான ரூபாய் 40,000 கோடியையும் இவ்வரசு விஞ்சவுள்ளது. பொதுக் கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாயச் சொத்துக்களை உருவாக்குவதற்கான மாநிலத்தின் மூலதனச் செலவிற்கான ஒதுக்கீடு, 2001–2002 ஆம் ஆண்டிலிருந்த

ரூபாய் 1778 கோடியிலிருந்து, ஏறக்குறைய மும்மடங்கு உயர்ந்து தற்போதைய வரவு செலவுத் திட்டத்தில் ரூபாய் 4792 கோடியை எட்டியுள்ளது. 2001–2002 ஆம் ஆண்டில் ரூபாய் 182 கோடியாக இருந்த ஏற்கனவே அமைக்கப்பட்ட பொதுக் கட்டமைப்பு வசதிகளின் பராமரிப்பிற்கான ஒதுக்கீடு, 2005–2006 ஆம் ஆண்டில் ரூபாய் 754 கோடியாக உயர்ந்துள்ளது.

14. தமிழகத்தின் இத்தகைய வளர்ச்சி மற்றும் சீர்திருத்தச் சாதனைகள், சர்வதேச நிதி நிறுவனங்களை மீண்டும் மாநிலத்தின் வளர்ச்சித் திட்டங்களுக்கு உதவிடத் தூண்டியுள்ளன. தமிழகத்தில் பன்னாட்டு நிதி நிறுவனங்களின் உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்களின் மதிப்பு, 2005–2006 ஆம் ஆண்டில் ரூபாய் 8550 கோடி (1.90 பில்லியன் அமெரிக்க டாலர்) என்ற சாதனை அளவை எட்டியுள்ளதென்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். இவற்றுள், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் (ரூ.2160 கோடி), தமிழ்நாடு சுகாதார அமைப்புகள் மேம்பாட்டுத் திட்டம் (ரூ.597 கோடி), தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் III (ரூ.1957 கோடி), புதுவாழ்வுத் திட்டம் (ரூ.717 கோடி) மற்றும் தமிழ்நாடு காடு

வளர்ப்புத் திட்டம் (ரூ.567 கோடி) ஆகியன தற்போது செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஏழை எளிய மக்களை எவ்விதத்திலும் பாதிக்காத வகையில் சீர்திருத்தத் திட்டங்களை இக்குறுகிய காலத்தில் மேற்கொண்டு, மாநிலத்தை மீண்டும் நிலை நிறுத்தியமைக்கான முழுப் பெருமையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களையே சேரும்.

15. விவசாயிகளுக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கும் முழுமையான சமூகப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான முன்னோடித் திட்டமாக, மாண்புமிகு முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தை இவ்வரசு துவக்கியுள்ளது. இத்திட்டம் தனது குறிப்பிடத்தக்க விரிவான அமைப்பிற்கும், நல்கும் பயனிற்கும் மிகப்பரவலான பாராட்டைப் பெற்றுள்ளது. புரட்சிகரமான இத் திட்டம், தமிழ்நாட்டிலுள்ள 1.37 கோடி விவசாயத் தொழிலாளர்களுக்கும் சிறு மற்றும் குறு உழவர்களுக்கும் வாழ்நாள் முழுவதும் அவர்களின் துயர் நீக்கி பாதுகாப்பளிப்பதாக அமைந்துள்ளது. இத்திட்டம், உறுப்பினர்களுக்கும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் திருமணம், மகப்பேறு மற்றும் தரமான கல்வி ஆகியவற்றிற்கும், உறுப்பினர்களுக்கான

ஓய்வூதியத்திற்கும், மரணம் மற்றும் எதிர்பாராச் செயலிழப்பு ஆகிய நேர்வுகளிலும் அரசு உதவியளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**16.** ஊரகப் பகுதிகளில் வருவாய் மற்றும் வளவாய்ப்புகளின் பெருக்கத்திற்கு முட்டுக்கட்டையாக இருந்த தடைகளைத் தகர்த்தெறிந்து, வேளாண்மைத் துறையின் வளர்ச்சியினை கட்டுப்படுத்தி வந்த சவால்களை வெற்றி காண்பதில், தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. மாற்றுப் பயிர்களை அறிமுகப்படுத்துதல், வேளாண்மையில் மதிப்பு கூட்டுதல், திறம்பட்ட நீர்ப்பயன்பாடு, துல்லிய பண்ணையியல் நடைமுறை, தரிசு நில மீட்பு மற்றும் நீர்பிடிப்புப் பகுதி மேம்பாடு, சீரமைக்கப்பட்ட விவசாயக் கடன்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட விரிவாக்கப்பணிகள் ஆகியவற்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தி வருவது, வேளாண்மைத் துறையை தொடர் வளர்ச்சிப் பாதையில் இட்டுச்செல்ல வழிவகுத்துள்ளது.

**17.** தமிழகத்தின் வேளாண் பொருளாதாரத்திற்கு விரைந்து புத்துயிரூட்டி, வலுப்படுத்த இவ்வரசு உறுதி கொண்டுள்ளது. தொடர்ந்து நிலவிய வறட்சி நிலைகளும், வரலாறு காணாத 2005 ஆம் ஆண்டு

வெள்ளப் பாதிப்புகளும், ஒருங்கிணைந்த நீர்வள நிருவாகத்தில் கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தைக் கோடிட்டுக் காட்டுகின்றன. வறட்சி மற்றும் வெள்ளத்தால் ஏற்பட்ட பயிர் சேதத்திற்கு இழப்பீடு வழங்கியது தவிர, **2000** ஆம் ஆண்டு கரிப் (kharif) பருவம் முதல் **2004–2005** ஆம் ஆண்டு ரபி (Rabi) பருவம் வரை பயிர் காப்பீட்டுத் தொகையாக ரூபாய் **98** கோடி வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு போன்ற நீர் வளம் குன்றிய மாநிலங்களின் துயர் அகற்ற ஆறுகளின் இணைப்பே சரியான தீர்வாக அமையும். ரூபாய் **3900** கோடி செலவு மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு, உலக வங்கி உதவிக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ள நீர்ப்பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் மற்றும் நீர்வள நிருவாகத் திட்டம், மாநிலத்திற்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும். இத்திட்டத்தை வடிவமைக்கும் பணிகள் முடிவடையும் தறுவாயில் உள்ளன.

**18.** ஆந்திரப் பிரதேச மாநில அரசு, பாலாற்றின் குறுக்கே **2000** மில்லியன் கன அடி (**2** டி.எம். கன அடி) உயர் கொள்ளளவு கொண்ட நீர்த் தேக்கம் ஒன்றைக் கட்ட உத்தேசித்திருப்பதாக வெளியாகியுள்ள ஊடகச் செய்திகள் இவ்வரசுக்கு மிகுந்த கவலையை

அளிக்கின்றன. இது தமிழ்நாட்டில் பெரும் அச்சத்தையும் ஐயப்பாட்டையும் ஏற்படுத்தியுள்ளது. ஆந்திரப் பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த குப்பம் பகுதியில், பாலாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் கட்டுவதற்கான எந்தவொரு திட்டப்பணியையும் மேற்கொள்ளக்கூடாது என மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு ஆந்திரப் பிரதேச முதல்வரை உடனடியாக வலியுறுத்தியுள்ளார். தமிழ்நாட்டின் வட மாவட்டங்களில் ஏறக்குறைய ஒரு இலட்சம் ஏக்கர் பாசனப் பகுதிகளில் வேளாண்மைப் பணிகளை மேற்கொண்டுவரும் விவசாயிகள் தங்கள் பாசனத்திற்கு இந்தப் பாலாற்றையே நம்பி இருப்பதாலும், பல நகர்ப்பகுதிகள் மற்றும் கிராமங்களுக்கு இந்நதி ஒன்றே முக்கியக் குடிநீர் ஆதாரமாகத் திகழ்வதாலும், பாலாற்றின் நீரை தடுத்து நிறுத்துவதற்கான எந்தவொரு முயற்சியும் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல.

**19.** விவசாயம் சாராத்துறை புத்துயிர் பெறவும் ஊரக வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் ஊக்கம் அளிக்கும் வகையில், இவ்வரசு மேற்கொண்ட முன்னோடித் திட்டமாகிய புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் நல்ல பயனளித்துள்ளது என்பதை இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் நான்

மகிழ்ச்சியடைகிறேன். 210 வட்டாரங்களில், ரூபாய் 212 கோடி முதலீட்டில் மொத்தம் 330 நிறுவனங்கள் உற்பத்தியை தொடங்கியுள்ளன. 82 வட்டாரங்களில், ரூபாய் 128 கோடி முதலீட்டில் 227 நிறுவனங்கள் செயல்படத் துவங்குவதற்கான பல்வேறு நிலைகளில் உள்ளன. இவை விரைவில் செயல்படத் துவங்கும்.

20. விவசாயிகளின் நலன் கருதி அவர்களது வேளாண்மை வருவாய் மேம்பாட்டிற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் இவ்வரசு அயர்வின்றி நல்கிவருகிறது. கரும்பு பயிரிடுவோருக்கு 9 சதவீதம் அல்லது அதற்குக் குறைவான பிழிதிறன் கொண்ட கரும்புக்கு, மெட்ரிக் டன் ஒன்றிற்கு முன்னெப்போதிருந்திராத உயரளவாக, ரூபாய் 1014–ஐ அரசின் குறைந்தபட்ச பரிந்துரை விலையாக (State Advised Price) நிர்ணயித்ததோடு, 9 சதவீதத்திற்கு மேல் கூடுதலாக உள்ள ஒவ்வொரு 0.1 சதவீதத்திற்கும், மெட்ரிக் டன் ஒன்றிற்கு ரூபாய் 8.80 ஊக்கத் தொகையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்பதை அறிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் மகிழ்ச்சியடைவார்கள். ரூபாய் 28 கோடி செலவிலான, இவ்வரசின் சிறு தேயிலை பயிரிடுவோர் பாதுகாப்புத் திட்டம், பன்னாட்டளவிலும்

உள்நாட்டிலும் ஏற்பட்ட விலைச் சரிவினால் வாடும் நீலகிரி மாவட்டத்திலுள்ள சிறு தேயிலைப் பயிரிடுவோருக்கு பெரும் ஆறுதலை அளித்துள்ளது.

**21.** விவசாயிகளின் கடன் பளுவைக் குறைக்கும் வண்ணம் திட்டங்களைச் செயல்படுத்தி, விவசாய கூட்டுறவுக் கடன்களைச் சீரமைத்த இவ்வரசின் சாதனை என்றென்றும் நினைவில் கொள்ளப்படும். **31.3.2004** அன்றுள்ளபடி, கூட்டுறவு வங்கிகளிடமிருந்து விவசாயிகள் பெற்ற ரூபாய் **2598** கோடி அளவிலான பயிர்க் கடன்கள், முதல் **2** ஆண்டு காலத்திற்கு கடன் அசலை திருப்பிச் செலுத்துவது நிறுத்திவைக்கப்பட்ட **5** ஆண்டுகாலக் கடன்களாக திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. இக்கடன்களுக்கு, **2006** ஆம் ஆண்டு ஜுன் திங்கள் **30** ஆம் நாள் வரை உள்ள, வட்டியைத் தள்ளுபடி செய்து ஒரு பெரும் வட்டி தள்ளுபடி திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இத்திட்டம் ரூபாய் **645** கோடி செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளது. விவசாயிகளுக்குத் தள்ளுபடி செய்யப்பட்ட தொகையை அரசே திருப்பித் தருவதன் மூலம், கூட்டுறவு நிதி நிறுவனங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன.

**22.** சுற்றுச்சூழல் பாதுகாப்பினை உறுதிசெய்வது, மாண்புமிகு முதலமைச்சரின் 15 அம்சத் திட்டத்தின் ஒரு பகுதியாகவும், இவ்வரசின் முக்கியக் குறிக்கோளாகவும் இருந்துவருகிறது. காடு வளர்ப்புத் திட்டங்கள் திறம்பட செயல்படுத்தப்பட்டமையால், 2001 ஆம் ஆண்டிலிருந்து தென் மாநிலங்களிலேயே மிக அதிகமான அளவில், தமிழ்நாட்டில் வனப்பகுதி அதிகரிக்கப்பட்டுள்ளது. துறையின் களப் பணியாளர்களுக்கு குறைந்த விலையில் அத்தியாவசியப் பொருட்களை வழங்குவதற்கு ஏற்பளித்தும் அனைத்து சரக அலுவலர்களுக்கும் (Territorial Rangers) வாகனங்களை வழங்கியும் மாண்புமிகு முதலமைச்சர் காடுகளைப் பாதுகாப்பதில் வனத் துறையின் திறனுக்கு அரண் சேர்த்துள்ளார்.

**23.** ஊரக விவசாயக் குடும்பங்களுக்கு துணை வருவாயினை அளிக்கும் கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீனளம் ஆகியவை முன் எப்போதுமிருந்திராத அளவிற்கு அரசின் உத்வேகத்தை பெற்றுள்ளன. அரசின் தீவிர நடவடிக்கைகளின் வாயிலாக, செயற்கைமுறை கருத்தரித்தல் மூலம் கால்நடைகளின் மரபணுத்தன்மை மேம்படுத்தப்பட்டு,

தமிழ்நாடு பால் உற்பத்தியில் நாட்டில் முன்னணி மாநிலங்களுள் ஒன்றாக திகழ்கிறது. தொலைதூரப் பகுதிகளில் கால்நடை மருத்துவ வசதிகளை வழங்கிட, சிறப்பு கால்நடை பராமரிப்புத் திட்டம் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை ரூபாய் 10 கோடி செலவில் 24,051 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. மொத்தம் 234 கால்நடை சுகாதார துணை மையங்கள் முழு வசதியுடன்கூடிய கால்நடை மருந்தகங்களாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன.

**24.** கச்சத்தீவைச் சுற்றியுள்ள பாக் ஜலசந்தியில், தமிழ்நாட்டு மீனவர்களுக்கெதிராக தொடர்ந்து நடைபெற்றுவரும் வன்முறைச் சம்பவங்கள் இந்த அரசுக்கு ஆழ்ந்த கவலை அளிக்கின்றன. கச்சத்தீவுப் பகுதியில் இயல்பான மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான இந்திய மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளையும், சிறப்புரிமைகளையும் பாதுகாக்க, இந்திய அரசு அத்தீவை நிரந்தரக் குத்தகை அடிப்படையில் பெற வேண்டுமெனக்கோரி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு பிரதமருக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

**25.** சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் துயர் நீக்கும் வகையில், சேதமடைந்த படகுகள் மற்றும் வலைகளைப் பழுதுபார்ப்பதற்கும், முற்றிலும் சேதமடைந்த படகுகள் மற்றும் வலைகளுக்குப் பதிலாக புதியனவற்றை வாங்கவும், இவ்வரசு ரூபாய் **146** கோடி இடருதவி வழங்கியுள்ளது. மீனளத் துறையில் தற்போதுள்ள கட்டமைப்பு வசதிகளை சர்வதேசத் தரத்திற்கு இணையாக உயர்த்துவதற்காக ரூபாய் **103** கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. ரூபாய் **108** கோடி செலவில் செயல்படுத்தப்பட்டுவரும் மீனவர்களுக்கான சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ், **10.36** இலட்சம் மீனவர்கள் பயனடைந்துள்ளனர். மத்திய அரசு பெட்ரோலியப் பொருட்களின் விலையை பலமுறை உயர்த்தியதிலிருந்து மீனவர்களை பாதுகாக்கும் வகையில், அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூபாய் **63** கோடி வருவாய் இழப்பு ஏற்பட்டதையும் பொருட்படுத்தாது, இவ்வரசு, மீன்பிடி நடவடிக்கைகளுக்காக மீனவர்கள் வாங்கும் டீசலுக்கு **100** சதவீதம் விற்பனை வரி விலக்கு அளித்துள்ளது.

**26.** நம்முடைய வறுமைக் குறைப்பு நடவடிக்கைகளில் ஆற்றலளித்தல் (empowerment) மிக

முக்கியக் கருவியாக விளங்கும் அதே வேளையில், ஏழைகள் மற்றும் ஒடுக்கப்பட்டவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்கு அதிக முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் எப்போதும் வாதிட்டு வந்துள்ளார். தமிழ்நாட்டில் ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய குறிப்பிடத்தக்க இரு வறுமைக் குறைப்புத் திட்டங்களை வடிவமைத்து செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. முதலாவதாக, ரூபாய் 717 கோடி செலவில், 15 மாவட்டங்களில் புதுவாழ்வுத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. அடுத்தது, மிக வறியவர்கள் தங்களுடைய வறுமை நிலையிலிருந்து மீளும் வகையில் அவர்களுக்கு வாய்ப்புகளை உருவாக்கி, சமூக மூலதனத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன், வறியவர்களிலும் மிகவறிய 3 இலட்சம் குடும்பங்களுக்கு பயனளிக்கும், மிகவறியோருக்கான வறுமைக் குறைப்புத் திட்டமாகும்.

**27.** தமிழக மக்கள் அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்ற இவ்வரசின் உறுதிப்பாட்டின் தொடர்ச்சியாக, பயனுள்ள உணவுப் பாதுகாப்பு வளையத்தை அமைக்கும் வண்ணம், பொது

வினியோக முறையை திருத்தியமைத்துச் சீரமைக்கும் மாபெரும் பணியை இவ்வரசு மேற்கொண்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு குடும்பமும், குடும்ப அட்டை பெறுவதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதி செய்துள்ளார். பழைய குடும்ப அட்டைகளைப் புதுப்பித்தல் மற்றும் தகுதியுள்ள குடும்பங்கள் அனைத்திற்கும் புதிய குடும்ப அட்டைகளை வழங்குதல் ஆகியவற்றால், மொத்த குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை **1.88** கோடியாக உயர்ந்துள்ளது. தமிழ்நாட்டின் பொது வினியோக முறை நாட்டிலேயே மிகச் சிறந்ததென நடுநிலையான நிறுவனம் ஒன்று கணித்துள்ளது.

**28.** தமிழ்நாட்டைத் தவிர, வேறு எந்த ஒரு மாநிலத்திலும், அரிசி கிலோ ஒன்றுக்கு ரூ.**3.50** என்ற குறைந்த விலையில் தேவைப்படும் அனைத்துக் குடும்பங்களுக்கும் வழங்கப்படுவதில்லை. இத்திட்டம், ஆண்டொன்றுக்கு மானிய வகையில் ரூபாய் **1200** கோடி அளவிற்கு அரசுக்கு பெரும் நிதிச் சுமையை ஏற்படுத்தியுள்ளது. நிலை இவ்வாறிருக்க, மத்திய அரசு, பொது வினியோக முறையின் மூலம் வறுமைக்கோட்டிற்கு மேல் இருப்போர்க்கு வழங்கப்படும் அரிசியின் மத்திய இடு

விலையை கிலோ ஒன்றுக்கு ரூ. 8.30 லிருந்து ரூ.9.15 ஆக உயர்த்தியிருப்பது இவ்வரசுக்கு கடும் அதிருப்தி அளித்துள்ளது. மேலும், அனைத்து இனங்களிலும் குடும்ப அட்டை ஒன்றுக்கான ஒதுக்கீடும் குறைக்கப்பட்டுள்ளது. இம்முடிவால், மத்தியத் தொகுப்பிலிருந்து மாநில அரசால் வாங்கப்படும் அதிக விலையுடைய வறுமைக்கோட்டிற்கு மேலிருப்போர்க்கான அரிசியின் அளவும் அதிகரிக்கும். இது, மாநிலத்திற்கு மிகப் பெரும் கூடுதல் மானியச் சுமையை ஏற்படுத்தும். இவ்வாறு அரிசியின் விலை மிகக் கடுமையாக உயர்த்தப்பட்டிருக்கும் போதிலும், மாநிலத்தில் அரிசியின் விலை தொடர்ந்து கிலோ ஒன்றுக்கு ரூ.3.50 என்ற அளவிலேயே இருக்கும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அறிவித்துள்ளார்கள். ஏழை எளியவரைப் பாதுகாப்பதற்காக இவ்வரசு மேற்கொண்டுள்ள இந்நடவடிக்கைகளின் விளைவாக ஆண்டுதோறும் ஏற்படும் ரூபாய் 300 கோடி கூடுதல் உணவு மானியச் சுமையால், ஓராண்டிற்கான மொத்த உணவு மானியம், ரூபாய் 1200 கோடியிலிருந்து ரூபாய் 1500 கோடியாக உயரும்.

**29.** ரூபாய் **250** கோடி செலவில், அனைத்து மாவட்டங்களிலும் அடிப்படை வசதித் தேவைகளை நிறைவு செய்வதை நோக்கமாகக் கொண்ட ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளுக்கான அடிப்படை வசதிகள் திட்டம் அண்மையில் தொடங்கிவைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவிப்பதில் நான் பெரு மகிழ்ச்சியடைகிறேன். இந்தப் பன்னோக்குத் திட்டம், மாநிலம் முழுவதும் குடிநீர் வழங்கல், வெள்ளநீர் வடிகால் அமைத்தல், பள்ளிகள் மற்றும் சத்துணவு மையங்களை பழுதுபார்த்தல், தெருக்கள், நடைபாதைகள், அணுகுசாலைகள், இடுகாட்டுக்குச் செல்லும் பாதைகள் ஆகியவற்றை அமைத்தல் போன்ற பணிகளை செயற்படுத்துவதில் மாவட்ட நிருவாகத்திற்குத் தேவையான நிதியை அளித்து, அனைத்துத் தேவைகளையும் நிறைவேற்றும்.

**30.** ஊரக ஏழை மக்களுக்கு வீட்டுவசதிப் பாதுகாப்பு அளிப்பது, முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு இவ்வரசின் உயர் முன்னுரிமையைப் பெற்றுள்ளது. ஊரகப் பகுதிகளிலும் சிறப்பு கிராம ஊராட்சிகளிலும் **1991**–க்கு முன்னர் கட்டப்பட்ட சுமார் **65,000** ஓட்டு வீடுகளைப் பழுதுபார்ப்பதற்காக, அடிப்படை வசதிகள் திட்டத்தின் கீழ், தேவையான நிதி

ஒதுக்கப்பட்டுள்ளது. 1.5 இலட்சம் கூரை வீடுகளை நிரந்தர வீடுகளாக நிலை உயர்த்துவதற்காக, ரூபாய் 37.50 கோடி செலவில் 2005–2006 ஆம் ஆண்டில் பெருந்திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டுள்ளது.

31. அனைவரும் பாராட்டும் "நமது கிராமம்" திட்டம், இம்மாநிலத்தில் ஒரு சமூக இயக்கமாக உருவெடுத்துள்ளதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். 100 சதவீத அளவிற்கு குழந்தைகளைப் பள்ளிகளில் சேர்த்தல், வறுமைக் குறைப்பு, சிசு இறப்பைக் குறைத்தல், பெண் கருக்கொலை மற்றும் சிசுக்கொலையை ஒழித்தல் மற்றும் மேம்படுத்தப்பட்ட கிராம சுகாதாரம் ஆகியவற்றை எய்துவதில், இப்புரட்சிகரமான திட்டம் அனைத்து கிராம ஊராட்சிகளிடையே ஆரோக்கியமான போட்டியை உருவாக்கியுள்ளது.

32. அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கு இவ்வரசு உயர் முக்கியத்துவம் அளித்து வருகிறது. 18,951 ஊரகக் குடியிருப்புகளிலும், 150 நகரங்களிலும் வசிக்கும் 1.5 கோடி மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்காக ரூபாய் 2423 கோடி செலவில் 2001–2006 ஆண்டுகளில், மொத்தம் 318 கூட்டுக் குடிநீர்

வழங்கல் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 223 கூட்டுக் குடிநீர் வழங்கல் திட்டங்கள் ஏற்கெனவே முடிக்கப்பட்டுள்ளன என்பதையும், இவற்றின் மூலமாக 10,043 ஊரகக் குடியிருப்புகளுக்கும் 91 நகர்ப்பகுதிகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது உறுதி செய்யப்பட்டுள்ளது என்பதையும் அறிய மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவர். மொத்தம் 22,069 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூபாய் 993 கோடி செலவில் தனி விசையேற்றங்கள் அமைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. ரூபாய் 239 கோடி செலவில் 39,796 கைப்பம்புகள் சிறிய விசையேற்றங்களாக மாற்றப்பட்டுள்ளன. இவ்வரசின் அயராத திட்டமிட்ட தொடர் நடவடிக்கைகளால் தமிழ்நாட்டில் குடிநீர் வழங்கல் மிகவும் மேம்பட்டுள்ளது என்பது அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மை ஆகும்.

33. வீடுகள், பள்ளிகள் மற்றும் அங்கன்வாடிகளில் கழிவறைகள் கட்டியதன் மூலம், 2001 ஆம் ஆண்டில் 15 சதவீதமாக இருந்த ஊரக சுகாதார நிலை, 2005 ஆம் ஆண்டில் 57 சதவீதமாக அதிகரித்து, தமிழ்நாடு கிராமப்புற சுகாதாரத்தில் நல்ல

முன்னேற்றம் கண்டுள்ளது. மாநிலம் முழுவதிலுமுள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் ரூபாய் 278 கோடி செலவில் மகளிருக்காக ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் கட்டப்பட்டுள்ளது மனநிறைவு அளிக்கிறது. இவை மேலும் திறனுடன் செயல்படும் வகையில், இவற்றிற்கு தற்போது கரிம வாயுக் கலன்கள் பொருத்தப்பட்டு வருகின்றன.

34. ரூபாய் 1957 கோடி செலவில் தொடங்கப்பட்டுள்ள தமிழ்நாடு நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்–III இவ்வரசின் மேலும் ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகும். இத்திட்டத்தின் கீழ், 24 மாவட்டத் தலைமையிடங்களிலும் 13 மற்ற நகரங்களிலும் முழு அளவில் பாதாள சாக்கடை வசதிகள் ஏற்படுத்தப்படும். இது தவிர சென்னைப் பெருநகர்ப் பகுதியில் இரயில்வே மேம்பாலங்கள், இரயில்வே சுரங்கப் பாதைகள், மேம்பாலங்கள் (grade separators) ஆகியவை அமைக்கப்பட்டு சாலைக் கட்டமைப்பு மேம்படுத்தப்படும். சென்னைப் பெருநகரப் பகுதிகளில் போக்குவரத்து நெரிசல் திறம்பட கையாளப்படுவதை இத்திட்டம் உறுதி செய்யும்.

**35.** ஏழைகளின் நலனுக்காகவே செயல்படும் இவ்வரசு, நகர்ப்புற ஏழை எளியவர் சந்தித்துவரும் பிரச்சனைகளுக்கு மிக உயர் முன்னுரிமை அளித்து வந்துள்ளது. அவர்களுக்குக் கட்டுப்படியாகக் கூடிய வீட்டுவசதிகளை அளிப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இதுவரை, ரூபாய் 250 கோடி ஒதுக்கீட்டில் ஏறக்குறைய 30,000 குடும்பங்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. 2005–2010 ஆண்டுகளில் ரூபாய் 250 கோடி ஒதுக்கீட்டில் நகர்ப்புற குடிசைப் பகுதி வீட்டுவசதி மேம்பாட்டிற்கான செயல் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது.

**36.** மாநிலம் முழுவதும் சாலை இணைப்பு வசதிகளை மேம்படுத்த, இவ்வரசு மிகப்பெரும் ஊக்கம் அளித்துள்ளது. 2001–2002 ஆம் ஆண்டில் ரூபாய் 257 கோடியாக இருந்த மூலதனச் செலவு, 2005–2006 ஆம் ஆண்டில் ரூபாய் 2081 கோடியாக ஏறக்குறைய 8 மடங்கு உயர்ந்துள்ளது. 2005–2006 ஆம் ஆண்டில், ரூபாய் 400 கோடி செலவில் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் நிலையுயர்த்தப்பட்டு வருகின்றன. மேலும், சிறப்பு கிராம ஊராட்சிகளில் சாலைகளை புதுப்பிக்கும் சிறப்புத் திட்டம் ரூபாய் 100 கோடி செலவில்

மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவை தவிர **2005–2006** ஆம் ஆண்டில் ரூபாய் **401** கோடி மதிப்பீட்டில் நகராட்சிப் பகுதிகளிலுள்ள சாலைகள் மேம்படுத்தப்படும். அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாலைகளைச் சீரமைக்கும் பணிகளை, இவ்வரசு போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு வருகிறது. முக்கிய அடிப்படைக் கட்டமைப்பு வசதியான சாலை இணைப்புகளுக்காக, இதுவரை எந்த ஒரு அரசும் இவ்வளவு அதிக அளவில் முதலீடு செய்ததில்லை. இம்முதலீடு, மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி மேலும் உயர வழிவகுக்கும்.

**37.** மத்திய அரசு டீசல் விலையை பலமுறை பெருமளவில் உயர்த்திய சூழ்நிலையிலும், அரசுப் பேருந்துப் போக்குவரத்து அமைப்புகளை நவீனப்படுத்தி, அரசுப் போக்குவரத்து நிறுவனத் தொழிலாளர்களுக்கு தாராள சம்பள உயர்வையும் வழங்கி, அதே நேரத்தில் பேருந்துக் கட்டண வீதத்தை நாட்டிலேயே மிகக் குறைவான அளவில் தொடர்ந்து வருவதற்கான பெருமை இந்த அரசையே சாரும். மாநிலப் போக்குவரத்துக் கழகங்கள், தங்களின் சிறந்த பணிகளுக்காக மூன்று விருதுகளையும் பெற்றுள்ளன.

**38.** இவ்வரசு **2001** ஆம் ஆண்டு மே திங்களில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது ரூபாய் **5000** கோடி வருவாய் இழப்புடன் மோசமான நிதி நெருக்கடி நிலைக்கு தள்ளப்பட்டிருந்த தமிழ்நாடு மின்சார வாரியம், மிகக் குறுகிய காலத்தில் மீண்டும் சீரான நிதி நிலைமைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. **2005** ஆம் ஆண்டில் மத்திய அரசு தமிழ்நாட்டிலுள்ள அனல்மின் நிலையங்களுக்கு வழங்கப்படும் நிலக்கரியின் அளவை **14** சதவீத அளவிற்குக் குறைத்த போதிலும், **2001** ஆம் ஆண்டு முதல் இவ்வாரியம் மின்வெட்டு எதுவும் இன்றி நுகர்வோர் அனைவருக்கும் தரமான மின்சாரம் வழங்கி வருகிறது என்பதிலும், வருமாண்டுகளிலும் மின்வெட்டின்றி இதே நிலை தொடரும் என்பதிலும் நாம் அனைவரும் பெருமிதம் கொள்ளலாம். **2005–2010** ஆம் ஆண்டுகளில் மாநிலத்தின் மின் உற்பத்தித்திறன் அதிகரிக்கப்படுவதை உறுதிசெய்ய, இவ்வரசு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. **4000** மெகாவாட் மின் உற்பத்தித்திறன் கொண்ட திட்டங்களுக்கான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன. பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள ஜெயங்கொண்டத்தில், **1000** மெகாவாட் திறன்கொண்ட மின்உற்பத்தி நிலையம் ஒன்றை, நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகம் நிறுவ உள்ளது. இது, மாநிலத்தின்

மொத்த புதிய மின் உற்பத்தித்திறன் அதிகரிப்பை, **5000** மெகாவாட்டாக உயர்த்தும். இவ்வரசு தேவையான நடவடிக்கைகள் மூலம் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்திக்கு தொடர்ந்து ஊக்கமளித்து வருவதால், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியில் தமிழ்நாடு நாட்டிலேயே முதலிடத்தைப் பெற்றுள்ளது. இந்தியாவின் மொத்த காற்றாலை சக்தித் திறனில், **58** சதவீத அளவான **2433** மெகாவாட் திறன் தமிழ்நாட்டில் நிறுவப்பட்டு இத்துறையில் தமிழகம் முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது.

**39.** சென்னை நகரத்தின் உள் கட்டமைப்பு, புறச்சூழல் மற்றும் வசதிகள் மீது இவ்வரசு காட்டிய அக்கறையின் காரணமாக, இன்று சென்னை மாநகரம், "கிழக்கின் அணிகலன்" ஆகத் திகழ்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஒப்புக் கொள்வார்கள். ரூபாய் **18,000** கோடி ஒதுக்கீட்டுடன் தற்போது செயற்படுத்தப்பட்டுவரும் பத்தாண்டு கால சென்னைப் பெருநகர் மேம்பாட்டுத் திட்டம், மின்வழுங்கல், குடிநீர் மற்றும் வடிகால் வசதி, போக்குவரத்து மேலாண்மை மற்றும் பயண வசதிகள், வீட்டுவசதி போன்ற துறைகளில் உள்கட்டமைப்பு வசதிகளை புதுப்பித்து நிலை

உயர்த்துவதில் மிகச்சிறந்த முன்னேற்றம் கண்டுள்ளது. சென்னை மாநகரில் பூங்காக்களையும் நடை பாதைகளையும் ஏற்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் எடுத்த முயற்சி இம்மாநகரின் அழகிற்கு மெருகூட்டியுள்ளது. சென்னை மாநகரில் நெடுநாட்களாக நிலவிவந்த குடிநீர்ப் பற்றாகுறைப் பிரச்சினைக்குத் தீர்வு கண்ட பெருமை மாண்புமிகு முதலமைச்சரின் தலைமையின் கீழான இவ்வரசையே சேரும். குறுகிய கால அளவில் அமைத்து சாதனை படைக்கப்பட்ட, நாளொன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட புதிய வீராணம் திட்டமானது, சென்னை நகருக்குக் குடிநீர் வழங்குவதில் சீரான நிலையைக் கொண்டு வந்துள்ளது. அனைத்துத் தடைகளையும் தகர்த்தெறிந்து நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் செயல்படுத்தப்படும். சென்னை மாநகர மக்களுக்குப் பயனளிக்கும் இத்திட்டம் உடன் நிறைவேற்றப்பட, சுற்றுப்புறச்சூழல் அனுமதியை உடனடியாக வழங்குமாறு இப்பேரவை மத்திய அரசைக் கேட்டுக்கொள்கிறது. சென்னை மாநகருக்கு நிச்சயமான குடிநீர் வழங்கலை உறுதி செய்ய இவ்வரசு எடுத்த முனைப்பான நடவடிக்கைகளை சென்னை மாநகர மக்கள் என்றென்றும் நினைவில் கொள்வர்.

**40.** சென்னையின் போக்குவரத்து மேலாண்மைக்கு முற்றிலும் புதுமையான தீர்வுகள் தேவை என்பதை உணர்ந்த இவ்வரசு, சென்னைப் பெருநகர்ப் பகுதிகளில் மிக அதிகப் போக்குவரத்துச் செறிவு மிகுந்த, **300** கிலோ மீட்டர் நீள அளவிலான வழிப்பாதைகளில், மோனோ இரயில் திட்டத்தை, பொதுத் துறை–தனியார் துறை பங்கேற்பு அடிப்படையில் செயல்படுத்த முடிவு செய்துள்ளது. இந்தத் திருப்புமுனையான முன் முயற்சி, சென்னைப் பெருநகரில் பயணம் செய்வதை ஓர் மகிழ்ச்சிகரமான அனுபவமாக மாற்றும் என நான் நம்புகிறேன்.

**41.** மாண்புமிகு முதலமைச்சரின் தொலைநோக்கு கொண்ட, 'புதிய தொழில் கொள்கை – **2003**', தமிழ்நாடு தொழில் துறையில் தனக்குள்ள அடிப்படை திறன்களை மேலும் வலுப்படுத்தி, வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முதலீட்டாளர்கள் முதலீடு செய்ய மிகவும் விரும்பித் தேர்ந்தெடுக்கும் இடமாக உருவெடுப்பதற்கு பெரிதும் உதவியுள்ளது. தமிழ்நாடு, **2005–2006** ஆம் ஆண்டில் "வருங்கால ஆசியாவின் சாதனையாளர்" எனத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. மேலும், பைனான்சியல் டைம்ஸ் நாளிதழின் ஓர்

அங்கமான "எஃப்டிஐ" பத்திரிகையால் (fDi magazine) "வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கும் திறன்கொண்ட மிகச் சிறந்த இடமாக" தமிழ்நாடு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது என்பதை அறிவதில் மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவர். இந்திய மாநிலங்களிடையே, பொருளாதார சுதந்திரக் குறியீடு 2005 இன் அடிப்படையில், மிக எளிதில் தொழில் புரிவதற்கு ஏற்ற மிகச் சிறந்த மாநிலமாக தமிழ்நாடு தேர்ந்தெடுக்கப்பட்டு முதலிடத்தைப் பெற்றுள்ளது. இந்தியாவிலேயே முதலீடு செய்வதற்கு ஏற்ற இடங்களில், தமிழ்நாட்டை முதன்மை நிலைக்குக் கொண்டுவர மாண்புமிகு முதலமைச்சர் எடுத்த தளர்வில்லாத முயற்சிகளே காரணம் என்பதற்கு, நோக்கியா, ஃபிளெக்ஸ்டிரானிக்ஸ், பி.எம்.டபிள்யூ போன்ற பன்னாட்டு நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தங்கள் தொழிற்சாலைகளை அமைப்பதற்கு முடிவு செய்திருப்பதே தக்க சான்றாகும்.

**42.** சேவைத் துறையில், குறிப்பாக தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகளில், தமிழ்நாடு பெரும் சக்தியாக உருவெடுக்க வேண்டும் என்பதற்காக, இந்த அரசு எடுத்துள்ள முனைப்பான நடவடிக்கைகள் நற்பலனை அளித்துள்ளன.

மின்–ஆளுமைக்கான ஆயத்த நிலையில், தமிழகம் முன்னிலை வகிப்பதாக நடுநிலை ஆய்வாளர்கள் தேர்ந்தெடுத்துள்ளனர். **2004–2005** ஆம் ஆண்டில் மட்டும், தமிழ்நாட்டில் புதிதாக மொத்தம் **400** தகவல்–தொழில்நுட்ப நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதாவது, தமிழ்நாட்டில் நாள்தோறும் குறைந்தது ஒரு தகவல் தொழில்நுட்ப நிறுவனம் அமைக்கப்படுகிறது. **2004–2005** ஆம் ஆண்டில், தமிழ்நாட்டின் மென்பொருள் ஏற்றுமதி மும்மடங்காக அதிகரித்து ரூபாய் **10,730** கோடி அளவை எட்டியுள்ளது. இது, சென்ற ஆண்டோடு ஒப்பிடுகையில் மெச்சத்தக்கதான **40** சதவீதத்திற்கும் மேலான வளர்ச்சி எட்டப்பட்டுள்ளதைக் குறிக்கிறது. நிருவாகத்திறனை மேம்படுத்துவதற்கும், தரமான சேவையை வழங்குவதற்கும் தேவையான மின்–ஆளுமைக்கான தகவல் தொழில்நுட்பத்திற்கு, இந்த அரசு முனைப்பான ஊக்கம் அளித்து வருகிறது. தமிழ்நாடு மாநில அளவிலான பரப்பு வலை அமைப்பின் (TNSWAN) மூலம், வட்டம் மற்றும் வட்டார அளவில் தகவல் பரிமாற்றத்திற்கு வகை செய்யும் பரந்த அலை இணைய வசதிகளை வழங்கும் பெரும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கிராம ஊராட்சிகள் அனைத்தையும் கணினி மயமாக்கும் அரசின் இந்த முயற்சி, ஊரகப் பகுதிகளில்

அறிவாற்றலையும் வளவாய்ப்புகளையும் விரிவுபடுத்துவதற்கு ஏற்றதொரு தூண்டு விசையாக அமையும்.

**43.** சேவைத் துறையை மேம்படுத்துவதிலும், உள்ளூர் வேலைவாய்ப்பை பெருக்குவதிலும், அதிக வாய்ப்புகள் உள்ள சுற்றுலாத் துறையை முழுமையாகப் பயன்படுத்துவதற்கு அரசு மேற்கொண்டுள்ள ஒருங்கிணைந்த முயற்சிகள், இந்தியாவில் விடுமுறையைக் கழிப்பதற்கு ஏற்ற ஒரு சிறந்த இடமாக தமிழ்நாடு உருவாகத் துணை புரிந்துள்ளன. **2001–2006** ஆண்டுகளில் எப்போதுமிராத அளவில் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டு குறிப்பிட்ட சுற்றுலா சுற்றுப்பாதைகள் வகுக்கவும் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், தமிழ்நாட்டை இந்தியாவிலேயே விடுமுறையைக் கழிக்க மிகச் சிறந்த இடமாக உருவாக்குவதற்கும் அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. செட்டிநாடு பாரம்பரிய சுற்றுலாவை மேம்படுத்தியமைக்காக, பசிபிக் பகுதி சுற்றுப் பயண எழுத்தாளர்கள் சங்கத்திடமிருந்து, தமிழ்நாடு மதிப்புமிக்க சர்வதேச விருதைப் பெற்றுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவதில் மகிழ்ச்சி அடைவார்கள்.

**44.** ஏழை மக்களுக்கு சுகாதார வசதிகளை தரமானதாகவும் இயலும் வகையிலும் அளித்து, தமிழ்நாட்டை இந்தியாவின் மருத்துவத் தலைநகராக மாற்றியதில் இந்த அரசின் செயல்பாடுகள் குறிப்பிடத்தக்கவையாகும். கடந்த ஐந்து ஆண்டுகளில், 106 ஆரம்ப சுகாதார நிலையங்கள் (PHCs) அனைத்து வசதியுடன் கூடிய 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகளாக நிலையுயர்த்தப்பட்டுள்ளன. இந்த அரசு, தொலைதூரப் பகுதிகளிலும் நோய்க்குறி அறியும் பணிகளை மேம்படுத்துவதற்காக, ரூபாய் 21 கோடி செலவில், ஏழு வட்டார நோய்க்குறி அறியும் மையங்களை ஏற்படுத்தியுள்ளது. தேனி, கன்னியாகுமரி, வேலூர் ஆகிய இடங்களில் 300 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. ரூபாய் 3 கோடி செலவில், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நாகர்கோவிலில் ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி நிறுவப்பட்டு வருகிறது. துணை மருத்துவப் பணியாளர்களின் தரத்தை மேம்படுத்துவதற்கும், அவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும், புதிதாக 11 செவிலியர் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. குழந்தைகளிடையே காணப்படும் "உதட்டுப் பிளவு" மற்றும் "மேலண்ணப் பிளவு" ஆகிய

உடலுறுப்புப் பிரச்சினைகளைச் சரிசெய்வதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கிவைத்த தனிச்சிறப்புத் திட்டம், இந்த அரசின் அக்கறை கொண்ட நிருவாகத்திற்கு மற்றோர் ஒளிரும் எடுத்துக் காட்டாகும். இவ்வுதவி தேவைப்படும் அனைத்து குழந்தைகளும் கண்டறியப்பட்டு, அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. ரூபாய் **597** கோடி செலவில், செயல்படுத்தப்பட்டுவரும் முன்னோடித் திட்டமான தமிழ்நாடு சுகாதார அமைப்புகள் மேம்பாட்டுத்திட்டம், மாநிலம் முழுவதிலும் உள்ள இரண்டாம் நிலை மருத்துவமனைகளில் வழங்கப்படும் சேவையின் தரத்தை மேம்படுத்துவதில் ஒரு மைல் கல்லாகத் திகழ்கிறது. இத்திட்டத்தின் கீழ், **62** அரசு மருத்துவமனைகளில் **24** மணி நேரமும் அவசரகால மகப்பேறு மருத்துவச் சிகிச்சை மற்றும் பிறந்த குழந்தைகளைப் பேணும் பணிகளை வழங்கத் தேவையான அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

**45.** இந்த அரசு, தான் செயல்படுத்திய முழுமையான சுகாதார மேம்பாட்டுத் திட்டங்கள் மூலம் குடும்ப நலத் துறையில் பெரும் சாதனைகள் படைக்கப்பட்டிருப்பது குறித்து பெருமிதம் கொள்கிறது.

கடந்த ஐந்தாண்டுகளில், முக்கிய சுகாதாரக் குறியீடுகளில் குறிப்பிடத்தக்க மேம்பாடு ஏற்பட்டுள்ளது. 2001 ஆம் ஆண்டில் 87.9 சதவீதமாக இருந்த மருத்துவமனை மகப்பேறுகள், 2005 ஆம் ஆண்டில் 94.3 சதவீதமாக அதிகரித்துள்ளது. 2001 ஆம் ஆண்டில், உயிருடன் பிறந்த 1000 குழந்தைகளில் சிசு மரணம் 49 ஆக இருந்தது. இது 2003 ஆம் ஆண்டில் 43 ஆகக் குறைந்துள்ளது. தமிழ்நாட்டில், மகப்பேற்றின்போது இறந்த தாய்மார்களின் எண்ணிக்கை, 2001–2004 ஆம் ஆண்டுகளில், 25 சதவீதம் குறைந்துள்ளது.

46. மக்கள் தரமான கல்வியைப் பெறுவதும் திறமைகளை பெருக்கிக் கொள்வதும் பொருளாதார வளர்ச்சியின் வேகத்தை அதிகரிப்பதோடு, அவர்கள் வாழவிரும்பும் வாழ்க்கைக்குத் தேவையான தகுதிகளைப் பெறச் செய்யும் வல்லமையும் படைத்தவை என்று மாண்புமிகு முதலமைச்சர் எப்போதுமே கருதிவந்துள்ளார். 2001 ஆம் ஆண்டு முதல் புதிய கல்வி நிறுவனங்களை தொடங்குவதிலும், தற்போதுள்ள கல்வி நிறுவனங்களின் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை நிலையுயர்த்துவதிலும், அரசு ஈடு இணையற்ற கவனம் செலுத்தி வருகிறது. புதிதாக 1274 தொடக்கப் பள்ளிகள்

தொடங்கப்பட்டுள்ளன. தற்போதுள்ள 2790 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன. 394 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக நிலையுயர்த்தப்பட்டுள்ளன. 406 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக நிலையுயர்த்தப்பட்டுள்ளன. காலியாக இருந்த 58,282 ஆசிரியர் பணியிடங்களை அரசு நிரப்பியுள்ளது. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் இலவசமாக பாடப் புத்தகங்கள் வழங்க அரசு எடுத்துள்ள முடிவு பெரிதும் வரவேற்கப்பட்டுள்ளது. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பதினொன்று மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் இலவசமாக மிதிவண்டி வழங்கும் திட்டத்தை நீட்டித்த மாண்புமிகு முதலமைச்சரின் முடிவு, தமிழ்நாட்டில் தரமான கல்வியை அனைவரும் பெற வழிவகுக்கும் ஒரு திருப்புமுனை நடவடிக்கையாகும். அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் பெற்றோர், துரதிருஷ்டவசமாக, விபத்துகள் காரணமாக உயிரிழக்க அல்லது நிரந்தர செயலிழப்புக்குள்ளாக நேரிடின், அத்தகைய மாணவர்களுக்கு ரூபாய் 50,000 உதவித் தொகை

வழங்கும் இவ்வரசின் திட்டம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

**47.** தொழிற்கல்வி இளநிலைப் பட்டப்படிப்புச் சேர்க்கைக்கான பொது நுழைவுத் தேர்வு, மாணவர்களுக்கு, குறிப்பாக ஊரக மாணவர்களுக்குப் பெரும் சுமையாகவும், மன உளைச்சலை ஏற்படுத்துவதாகவும் உள்ளது என்று கருதி, இத்தேர்வு முறையை இவ்வரசு 2005 ஜுன் திங்களில் ரத்து செய்தது. பொது நுழைவுத் தேர்வை ரத்து செய்யும் அரசின் இம்முடிவு பரவலாக வரவேற்கப்பட்ட போதிலும், இந்திய மருத்துவக் கழகம் மற்றும் அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் சில விதிமுறைகள் காரணமாக இதனைச் செயல்படுத்த இயலவில்லை. ஆகவே, இவ்விதிமுறைகளைத் திருத்தியமைக்குமாறு இவ்வரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டது. தற்போது நிலவும் நிச்சயமற்ற நிலையைப் போக்கி, மாநிலப் பாடத்திட்ட மேல்நிலைதேர்வு மதிப்பெண்களின் அடிப்படையில், மாணவர் சேர்க்கை குறித்த தெளிவானதொரு திட்டம் வகுக்கப்பட வேண்டுமென்று பெற்றோர்களும் மாணவர்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். மாணவர்களின் தரநிலையை நிர்ணயிப்பதற்கு மாநிலப்

பாடதிட்டத்தின் மேல்நிலை வகுப்புத் தேர்வு மதிப்பெண்களே பொதுவான அடிப்படையாக இருக்க வேண்டுமென்ற அடிப்படைக் கோட்பாட்டைப் பின்பற்ற அரசு முடிவு செய்துள்ளது. மாநிலப் பாடத் திட்டத்தின் மேல்நிலைத்தேர்வில் பெற்ற மதிப்பெண்களே மாணவர் சேர்க்கைக்கு பொதுவான அடிப்படையாகக் கருதப்பட்டு, ஏனைய பாடத் திட்டங்களின் கீழ் பயிலும் மாணவர்களை மாநிலப் பாடத் திட்டத்தின் மேல்நிலைத்தேர்வு மதிப்பெண்களுக்கு நிகரான அடிப்படைக்குக் கொண்டுவரும் வகையில், அவர்களுக்கென ஒரு பொது நுழைவுத் தேர்வு நடத்தப்படும். இதன் வாயிலாக, மாநிலப் பாடத் திட்டத்தின் கீழ் மேல்நிலைத் தேர்வு எழுதும் பெரும்பாலான மாணவர்களின் சுமையையும் மன உளைச்சலையும் குறைப்பது, ஏனைய அனைத்துப் பாடத்திட்டத் தேர்வு மதிப்பெண்களையும் மாநிலப் பாடத்திட்டத்தின் மேல்நிலைத்தேர்வு மதிப்பெண்களுக்கு நிகரான அடிப்படைக்குக் கொண்டுவரும் சரியான முறை ஒன்றை வகுப்பது ஆகிய இரு நோக்கங்களும் நிறைவேறும். இம்மாற்றங்களுக்குச் செயல்வடிவம் கொடுப்பதற்குத் தேவையான சட்டம் இயற்றப்படும்.

**48.** உலக அளவில் தரமான தொழில்நுட்ப மனித ஆற்றலை பெருமளவில் வழங்கும் ஒரு மாநிலமாக தமிழ்நாடு உருவாகியுள்ளது. மாநிலம் முழுவதிலுமுள்ள **237** பொறியியல் கல்லூரிகளும், **230** பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளும் தரமான தொழில்நுட்பக் கல்வியைப் பெறுவதற்குரிய புதிய வாய்ப்புகளை உருவாக்கித் தந்துள்ளன. பொறியியல் மற்றும் பல்தொழில் பயிற்சிக் கல்லூரிகளில் தொழில்நுட்பக் கல்வியின் தரத்தை உலகத் தரத்திற்கு இணையாக மேம்படுத்துவதற்கான திட்டம் ஒன்று ரூபாய் **96** கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**49.** போட்டி விளையாட்டுகளுக்கும், விளையாட்டு வீரர்களுக்கும் இவ்வரசு அளிக்கும் ஊக்கமானது, தமிழ்நாட்டில் குழந்தைகள் மற்றும் இளைஞர்களிடையே ஆரோக்கியமான மனம் மற்றும் உடல் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான ஆக்கபூர்வமான ஒரு காரணியாக இருந்து வந்துள்ளது. "சர்வதேச விளையாட்டு வீரர்களின் திறமையைக் கண்டறியும் திட்டம்" பள்ளிகளில் வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட்டுள்ளது. தேசிய மற்றும் உலக அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் விருதுபெறும்

வீரர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் இவ்வரசு அளிக்கும் ரொக்க ஊக்கத்தொகைத் திட்டம் பரவலாக வரவேற்கப்பட்டுள்ளது.

**50.** இந்த அரசு, கொள்கைகள் மற்றும் செயல்திட்டங்களை வகுக்கும்போது, மகளிருக்கு ஆற்றல் அளிப்பதற்கு (empowerment) எப்போதுமே முன்னுரிமை அளித்து வந்துள்ளது. தமிழ்நாட்டில் மகளிர் சுய உதவிக்குழு இயக்கத்திற்கு வித்திட்ட மாண்புமிகு முதல்வர், இன்று அவ்வியக்கம் ஒரு கண்கவர் சமூகப் புரட்சி மலராகப் பூத்துக் குலுங்கக் காண்கிறார். முறையே ரூபாய் **889** கோடி மற்றும் ரூபாய் **1563** கோடிக்கும் அதிகமான சேமிப்பு மற்றும் கடன் வசதியுடன், **3** இலட்சம் மகளிர் சுயஉதவிக் குழுக்களில், ஏறக்குறைய **50** இலட்சம் உறுப்பினர்கள் பதிவு செய்யப்பட்டு, இன்று தமிழ்நாட்டில் மகளிர் சுயஉதவிக் குழு இயக்கம், உண்மையில் ஒரு மாபெரும் சமுதாய இயக்கமாக வளர்ந்துள்ளது. "தொட்டில் குழந்தை திட்டம்" மற்றும் "பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்" ஆகிய தனிச் சிறப்பு வாய்ந்த திட்டங்கள், பெண் குழந்தைகளின் வாழ்க்கையைப் பாதுகாப்பதிலும், சமூக அந்தஸ்தை உயர்த்துவதிலும் முக்கியப் பங்காற்றியுள்ளன. தமிழ்நாட்டிலுள்ள

குழந்தைகள், கருவுற்ற தாய்மார்கள், முதியோர் ஆகியோருக்கு முழுமையான அளவில் தரமான துணை சத்துணவு அளிக்கப்படுவதை உறுதி செய்த இந்த அரசு பாராட்டிற்குரியது. நாடாளுமன்றத்திலும், மாநிலச் சட்டப் பேரவையிலும் மகளிருக்கு **33** சதவீத இட ஒதுக்கீடு அளிக்கும் சட்டத்தை இயற்றுவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு விரைந்து எடுக்க வேண்டும் என்று இந்த அரசு வலியுறுத்துகிறது.

**51.** ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மக்களுக்கு சமூக, பொருளாதார மற்றும் கல்வி உரிமைகளை அளித்து, அவர்களைப் பேணிக் காப்பதே இந்த அரசின் இடையறா முயற்சியாக இருந்து வந்துள்ளது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மகளிருக்காகச் செயல்படுத்தப்படும் புதுமையான நிலம் வாங்கி அளிக்கும் திட்டம், பெண்களுக்கு சொத்துரிமை அளித்து, சமூகப் புரட்சியை ஏற்படுத்தும். வாடகைக் கட்டடங்களில் இயங்கும் அனைத்து ஆதி திராவிடர் மாணவர் இல்லங்களுக்கும் சொந்தக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்படும் என்று, **2001** ஆம் ஆண்டில் இவ்வரசு உறுதி அளித்தது. ரூபாய் **155** கோடி செலவில்

493 மாணவர் இல்லக் கட்டடங்கள் கட்ட அனுமதி அளிக்கப்பட்டு இவ்வுறுதி நிறைவேற்றப்பட்டுள்ளது. ரூபாய் 4 கோடி செலவில், மேலும் 108 புதிய மாணவரில்லங்களையும் இந்த அரசு தொடங்கும். அனைத்து ஆதி திராவிடர் குடியிருப்புகளிலும் அணுகுசாலை, குடிநீர்வசதி, இடுகாட்டுப்பாதை, தெருவிளக்கு போன்ற அடிப்படை வசதிகளை அமைப்பதற்கான பெருந்திட்டம் வகுக்கப்பட்டு படிப்படியாக செயல்படுத்தப்படும். ரூபாய் 71 கோடி மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கான முதற்கட்டப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

52. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் மற்றும் சிறுபான்மையினர் ஆகியோரைப் பாதுகாப்பதிலும், அவர்களுடைய நலனைப் பேணுவதிலும், இவ்வரசு எப்போதும் கவனம் செலுத்தி வந்துள்ளது. இவ்வகுப்பைச் சேர்ந்த மாணவர்களின் நலனுக்காக வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் 761 மாணவர் இல்லங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும் என்று, மாண்புமிகு முதல்வர் அவர்கள் உறுதியளித்திருந்தார்கள். இவ்வரசு உறுதியளித்தவாறே ரூபாய் 235 கோடி செலவில் 761 புதிய

மாணவரில்லங்களைக் கட்ட அனுமதி அளித்துள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

**53.** நெசவாளர்களின் நலனுக்கு இவ்வரசு எப்போதும் உயர் முன்னுரிமை அளித்து வந்துள்ளது. இவ்வாண்டு பொங்கல் பண்டிகையின்போது, **1.64** கோடி சேலைகளையும், **1.64** கோடி வேட்டிகளையும், **3.28** கோடி பயனாளிகளுக்கு, ரூபாய் **256** கோடி செலவில் இவ்வரசு வழங்கும். ஏழை எளிய மக்களுக்கு உடைப் பாதுகாப்பு அளிப்பதுடன், இத்திட்டம், இம்மாநிலத்திலுள்ள நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பினை அளிக்கும். **2** இலட்சம் நெசவாளர்கள் பயனடையும் வகையில் புதிய சுகாதார ஈட்டுறுதித் திட்டத்தைச் செயற்படுத்த இவ்வரசு கருதியுள்ளது. இதன்கீழ் ஒவ்வொரு நெசவாளரும் ஆண்டுதோறும் செலுத்தவேண்டிய ஆண்டுக் காப்பீட்டுத் தொகையான ரூபாய் **200**–ஐ செலுத்தும் பொறுப்பையும் அரசே ஏற்று, இதற்காக ரூபாய் **4** கோடியை ஒதுக்கியுள்ளது.

**54.** தமிழ் மொழி, கலை மற்றும் பண்பாடு ஆகியவற்றைப் பேணுவதிலும் மாநிலத்தின் வளமான பண்பாட்டு பாரம்பரியத்தை பாதுகாப்பதிலும் இவ்வரசு

எப்போதுமே கவனம் செலுத்தி வந்துள்ளது. அனைத்து வகைப் பள்ளிகளிலும் எல்.கே.ஜி. முதல் 12 ஆம் வகுப்புவரை அறிவியல் தமிழ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், மாணவர்களுக்கு இலவசமாக அறிவியல் தமிழ் பாடப் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சரின் சிந்தையில் உதித்த "அன்னதானத் திட்டம்" பெரும் வெற்றி பெற்று, ஏழை மக்கள் உணவு பாதுகாப்பு பெறும் தலைசிறந்த திட்டமாகப் பாராட்டப் பெற்றுள்ளது. போதுமான வருமானமுள்ள கோயில்களின் நிரந்தரப் பணியாளர்கள், பணியாளர் வருங்கால வைப்புநிதித் திட்டம் மூலம் மாதமொன்றுக்கு ரூபாய் 750 க்குக் குறையாமல் ஓய்வூதியம் பெறும் வகையில், இவ்வரசு புதிய ஓய்வூதியத் திட்டம் ஒன்றை வகுத்துள்ளது. குறைந்த வருமானமுள்ள கோயில்களைப் பொறுத்தவரையில், உபரிநிதி உள்ள கோயில்களிலிருந்து நிதியைத் திரட்டி, அந்நிதியிலிருந்து மூல நிதியம் ஒன்றை ஏற்படுத்தி, அடுத்த பத்தாண்டுகளில் ஓய்வு பெற உள்ள பணியாளர்கள் உட்பட, அனைத்துப் பணியாளர்களுக்கும் ஓய்வூதியம் வழங்கும் ஒரு தனி ஓய்வூதியத் திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியாளர்களும் மாதமொன்றுக்கு ரூபாய் 750

ஓய்வூதியமாக பெறுவர். மாநிலத்தின் பல்வேறு கோயில்களில் பணிபுரியும் சுமார் 10,000 பணியாளர்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைவர்.

55. தமிழக மக்களின் பயனுக்கான வளர்ச்சி இலக்குகளை எய்துவதில் அர்ப்பணிப்பு உணர்வு மிக்க அரசுப் பணியாளர்களின் பங்களிப்பை இவ்வரசு மிகவும் மதிக்கிறது. மத்திய அரசு அதன் பணியாளர்களுக்கு வழங்கிய அகவிலைப்படி உயர்வுத் தவணைகளை, இவ்வரசு சந்திக்க வேண்டியிருந்த நிதி நெருக்கடியின் காரணமாக, உடனுக்குடன் வழங்க இயலாமற் போயிற்று. பின்னர் இவ்வரசு அயராத பெரும் முயற்சிகளை மேற்கொண்டு, நிதி நிலையைச் சரிசெய்து, அகவிலைப்படி உயர்வுகள் படிப்படியாகக் குறைந்தகால இடைவெளியுடன் அளிக்கப்படுவதை உறுதி செய்துள்ளது. தற்போது, மாநில அரசுப் பணியாளர்களுக்கும் ஓய்வூதியதாரர்களுக்கும் வழங்கப்பட்டு வரும் அகவிலைப்படியை 1.1.2006 முதல் அடிப்படைச் சம்பளத்தின் 67 சதவீதத்திலிருந்து 71 சதவீதமாக உயர்த்த இவ்வரசு முடிவு செய்துள்ளது. இதனால், அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூபாய் 282 கோடி கூடுதல் செலவு ஆகும். அரசுப் பணியாளர்கள் மக்களுக்கு மேலும் சிறப்பாக சேவை புரிந்திடுவதற்கு

ஏற்ற வகையில், அவர்களின் வாழ்க்கைத்தரம் மேம்படுவதை உறுதிப்படுத்த வேண்டிய அதே வேளையில், சரியான நிதிநிலை நிர்வாகத்தின் பயன்கள், ஏழை எளிய மக்களைச் சென்றடைய வேண்டியதன் அவசியத்தையும் நாம் கருத்திற்கொள்ள வேண்டியுள்ளது. இந்த நேர்த்தியான சமன்பாட்டைத்தான் இவ்வரசு வெற்றிகரமாக எய்தியுள்ளது.

**56.** தமிழ்நாட்டில் ஊழலற்ற, மக்கள் பங்கேற்கும், ஒளிவு மறைவில்லாத, பொறுப்புணர்வு மிக்க நிருவாகத்தை அளிக்க, இவ்வரசு எடுத்துவரும் நடவடிக்கைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கறிவர். அரசு, மாநில தகவல் ஆணையம் அமைக்கப்பட்டிருப்பது குறித்த அறிவிக்கையை வெளியிட்டிருப்பதோடு, **2005** ஆம் ஆண்டு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தேவையான விதிகளையும் இயற்றியுள்ளது என்பதை இம்மாமன்றத்தில் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

**57.** இவ்வரசின் கொள்கைகளையும் திட்டங்களையும் நான் விரிவாக எடுத்துரைத்துள்ளேன். இம்மாநிலம் அனைத்துத் துறைகளிலும், ஈடு இணையற்ற சாதனைகளுடன் முன்னேறி தலைநிமிர்ந்து

பீடுநடைபோடுகிறது. மாண்புமிகு முதலமைச்சரின் எழுச்சியூட்டும் தலைமைப் பண்பும், மனிதநேயம் மிக்க நிருவாகமும் முழுப் பாராட்டுதலுக்கு உரியவையாகும். எதிர் காலத்திலும் தமிழ்நாடு தொடர்ந்து அனைத்துத் துறைகளிலும் முதன்மை நிலையை எய்தும் என்ற உறுதியான நம்பிக்கையுடன் என் உரையை நிறைவு செய்கிறேன்.

வணக்கம்

ஜெய்ஹிந்த்